செய்தி வெளியீடு எண் : 1221 நாள் : 16.08.2024

செய்தி வெளியீடு

**மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் வேளாண்மைப் பொறியியல் துறையின் திட்டங்கள் குறித்து இன்று (16.08.2024) வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் மாவட்ட அதிகாரிகளுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.**

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் வேளாண்மைப் பொறியியல் துறையின் திட்டங்கள் குறித்து இன்று (16.08.2024) வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் மாவட்ட அதிகாரிகளுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கடந்த 08.01.2022–ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சொந்தமான வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கிட 'இ–வாடகை' ஆன்லைன் செயலி துவக்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் 2022–23–ஆம் ஆண்டில் 21,166 விவசாயிகள் பயனடைந்தனர். இதனைத் தொடர்ந்து 2023–24–ஆம் ஆண்டில் 30 சதவீதம் அதிகரித்து 9,797 விவசாயிகள் கூடுதலாக மொத்தம் 30,963 விவசாயிகள் பயனடைந்தனர். இதனால் அரசுக்கு ரூ.10.20 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் எட்டப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, கடந்த ஆண்டில் பெய்த பெருமழையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை பயன்படுத்தி 3330.40 ஏக்கர் பரப்பளவில் 2182 விவசாயிகள் பயனடையும் வகையில்

மணல் திட்டுகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளையும் விரைவில் முடித்திட மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

டெல்டா மாவட்டங்களில் 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.20 கோடி செலவில், 4961 கிலோ மீட்டர் நீளத்திற்கு தூர்வாரப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மறுசீரமைப்பின்படி, வட்டார அளவில் உதவிப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) / இளநிலைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) பணியமர்த்தப்பட்டு, டிராக்டர்கள் வட்டார அலுவலகத்தில் நிறுத்தப்பட்டுள்ளதால், வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு எளிதில் கொண்டு சேர்த்து வாடகைக்கு வழங்கிட ஏதுவாக உள்ளது. இதனால் விவசாயிகள் உரிய நேரத்தில் வேளாண் பணிகளை இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ள முடிகிறது.

நீராதாரங்களை மேம்படுத்திடவும், கிராமங்களின் விவசாயிகள் பயன்பெறும் பொருட்டும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இதுவரை 1924 பண்ணைக் குட்டைகள் தனிப்பட்ட விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் அமைத்துத் தரப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான வேளாண் இயந்திரங்கள், கருவிகளை இயக்குதல், பராமரித்தல் தொடர்பான பயிற்சி முகாம்கள், மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற முகாம்கள் மற்றும் வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான திட்டத்தினை விரைந்து முடித்திட துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், கூட்டத்தின் முடிவில் மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், விவசாயிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு விவசாயத்திற்குத் தேவையான புதிய திட்டங்களை கண்டறிந்து வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்திடவும், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ஏற்கனவே

செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களான விவசாயிகளுக்கு சூரிய சக்தி பம்பு செட்டுகள் மானியத்தில் அமைக்கும் திட்டம், 100 சதவீத மானியத்தில் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், நீர்சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைத்தல் போன்றவற்றை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் வகையில் வெற்றிக் கதைகளை துண்டு பிரசுரங்கள், தொலைக்காட்சி மற்றும் செய்தி குறிப்பின் வாயிலாக பிரபலப்படுத்திடவும் அறிவுரை வழங்கினார்கள்.

இறுதியாக, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்கி அவற்றை விவசாயிகளிடையே பிரபலப்படுத்திட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.



இந்நிகழ்வில் வேளாண்மைப் பொறியியல் துறையால் வடிவமைக்கப்பட்ட நெல் தானியத்தினை மூட்டையில் பிடிக்கும் கருவியின் செயல் விளக்கத்தினை மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு அதனை மேலும் மேம்படுத்திட அறிவுரைகள் வழங்கினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் இதர துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu